# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2023 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, ரதனதிஸ்ஸ சமாதான மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

(2023 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---


2023, மே மாதம் 26 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 25.00 தபாற் செலவு : ரூபா 150.00

இச்சட்டத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# 2023 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, ரதனதிஸ்ஸ சமாதான மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2023 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.ஒ. (கூட்.) 1/2021

## ரதனதிஸ்ஸ சமாதான மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை

"ரதனதிஸ்ஸ சமாதான மன்றம்" என அழைக்கப்படுவதும், அறியப் படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்தோடு தொடர்புபட்ட அதனது குறிக்கோள்களையும், கருமங் களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இதற்குமுன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன், சொல்லப்பட்ட மன்றமானது எந்தப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதற்குமுன்னர் வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அத்துடன் கூட்டிணைக்கப்படுவதற்காக விண்ணப்பித்துள்ளதாதலாலும், அத்துடன் சொல்லப்பட்ட விண்ணப் பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, ரதனதிஸ்ஸ சமாதான மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

ரதனதிஸ்ஸ சமாதான மன்றத்தைக் கூட்டிணைத்தல்

**2.** (1) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ரதனதிஸ்ஸ சமாதான மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அத்துடன் இத்தால் அமைத்துருவாக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படவேண்டிய அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டிணைக்கப்பட்ட குழு" எனக்

2-PL 012234-877 (2021/01)

குறிப்பீடுசெய்யப்படும்) "ரதனதிஸ்ஸ சமாதான மன்றம்" என்னும் பெயரின்கீழும், மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவாயிருத்தலும் வேண்டுமென்பதோடு அது அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக் கவும்படலாம் அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக் கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் கருத்தெல்லைக் குள்ளும் நோக்கத்துக்காகவும் வலிந்துதவு சமூகசேவை ஒழுங் கமைப்பாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்வதற்கும் அது தொடர்பாக ஏற்புடையதாதல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் பொதுக் குறிக் கோள்கள்

3. (1) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக் கமைய கூட்டிணைக்கப்பட்ட குழு அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுவான குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) மதம்சார் இடங்களை நிர்மாணிப்பதற்கும் அவற்றை சீராக்குவதற்குமாக கட்டிட மூலப்பொருட்கள், வேலைத் திறன் போன்ற வடிவத்தில் பணம் அல்லது வேறு உதவிகளை வழங்குதல்;

(ஆ) சிறுவர்கள், இளம் ஆட்கள் மற்றும் இளைஞர்களுக்கான தலைமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தல்;

(இ) இறைச்சிக்காக வெட்டுதலிலிருந்து கால்நடைகளை பாது காத்தலும் காப்பாற்றுதலும்; அத்துடன்

(ஈ) கல்வி, மத, கலாசார, கலைசார் மற்றும் விளையாட்டு வசதிகளின் அபிவிருத்தியில் ஏதேனும் அமைச்சினால் அல்லது அரசாங்கத் திணைக்களத்தினால் அல்லது

ஏதேனும் மாகாண சபையினால் செய்யப்பட்ட எழுத்திலான வேண்டுகோளைப் பின்பற்றி அத்தகைய ஏதேனும் அமைச்சுக்கு அல்லது அரசாங்கத் திணைக்களத்திற்கு அல்லது மாகாணசபைக்கு உதவுதல்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதில், கூட்டிணைக்கப்பட்ட குழுவானது அத்தகைய நடைமுறைப்படுத்தலை இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் அபிப்பிராயம், பிறந்த இடம் அல்லது அத்தகைய வேறு ஏதுவின் அடிப்படையில் ஏதேனும் வேறுபாடின்றி நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழு ஆனது அமைச்சின் அல்லது அரசாங்கத் திணைக்களத்தின் அல்லது மாகாண சபையின் பணியுடன் முரண்பாடில்லை என்பதனை உறுதிப்படுத்துதல்

4. கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களானவை கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிக்கும் மற்றும் ஏதேனும் அமைச்சினால் அல்லது அரசாங்கத் திணைக்களத்தினால் அல்லது மாகாண சபையினால் ஒரே சமயத்தில் நிறைவேற்றப்படுகின்ற ஏதேனும் பணிக்கும் இடையிலான ஏதேனும் முரண்பாட்டை உருவாக்காத அளவிற்கும் அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தல்

5. (1) இச்சட்டத்தின் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கும் மற்றும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கும் அமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களின் முகாமையும் நிர்வாகமும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான பதவிதாங்குநர்களின் அத்தகைய எண்ணிக்கையினரைக் கொண்ட (இதனகத்துப் பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைத்துவப் பேரவை ஒன்றினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) (அ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவிவகிக்கின்ற மன்றத்தின் முகாமைத்துவப் பேரவையின் உறுப்பினர்கள் பந்தி (ஆ) இன் கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கமைவாக,

7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் பந்தி (ஈ) வில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் முதலாவது பேரவை நியமிக்கப்படும் அல்லது தேர்ந்தெடுக்கப்படும் வரை கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்கால பேரவை ஒன்றாகப் பணியாற்றுதல் வேண்டும்.

(ஆ) ஏழாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, இடைக்கால பேரவையானது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்கால நிருவாகத்திற்காகவும் கூட்டிணைக்கப்பட்ட குழுவானது முதலாவது பேரவையின் உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கப்படுவதற்காகவும் அல்லது நியமிக்கப்படுவதற்காகவும் இச்சட்டம் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாததாக விராதவையுமான விதிகளை ஆக்குவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:

ஆயினும், 7 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

(இ) இடைக்கால பேரவையின் ஏதேனும் முடிபானது ஏதேனும் கூட்டத்திற்கு சமுகமளித்திருக்கும் அதன் உறுப்பினர்களின் பெரும்பான்மையோரால் எடுக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது பேரவையானது இச்சட்டம் தொடங்குகின்ற தேதியிலிருந்து ஓராண்டிற்குள் நியமிக் கப்படுதல் வேண்டும் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(3) (அ) போஷகர்களும் மதியுரைநர்களும் உட்பட, பேரவையின் பதவிதாங்குநர் ஒவ்வொருவரும், மூன்றாண்டு காலப்பகுதி யொன்றுக்கு நியமிக்கப்படுதல் வேண்டும் அல்லது தேர்ந்தெடுக்கப் படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எவரேனும் பதவி தாங்குனர், போஷகர் அல்லது மதியுரைநர் சொல்லப்பட்ட மூன்றாண்டுகள் காலப்பகுதி கழிந்த பின்னர் மீள் நியமனத்துக்கு அல்லது மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகவுடையராதலும் வேண்டும்.

(ஆ) பதவிதாங்குநர் ஒருவரின் இறப்பு, பதவிவிலகுதல், உடற்றகுதியீனம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல், காரணமாக வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில், பேரவையானது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரைத் தேர்ந்தெடுத்தல் அல்லது நியமித்தல் வேண்டும்.

(இ) பந்தி (ஆ) வின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஆள், எந்த உறுப்பினரை அவர் அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக் காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்திற்கு மட்டுமே பதவி வகித்தல் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தத்துவங்கள்

6. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, பின்வரும் தத்துவங்கள் உட்பட, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் அல்லது இவற்றுள் ஏதேனுமொன்றிற்கு தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடியவாறான காணிகள் அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்வதற்கும், வாடகைக்கு எடுக்கவும், நிர்மாணிக்கவும், புனரமைக்கவும் மற்றும் வேறுவகையாகப் பெற்றுக்கொள்ளவும் அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் உசிதமானதெனக் கருதக்கூடியவாறு அவற்றைக் கையாளவும் அல்லது கையுதிர்க்கவும்;

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்கு அல்லது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் அதன் சார்பில்

நேரடியாகவாயினுஞ்சரி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினூடாகவாயினுஞ்சரி அல்லது முகவரினூடாகவாயினுஞ்சரி செய்து கொள்வதற்கும் மற்றும் புரிவதற்கும் அல்லது நிறைவேற்றுவதற்கும்;

(இ) பிணைப்பொறுப்புக்களுடனோ அல்லது பிணைப் பொறுப்புக்களின்றியோ உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலவளங்களிலிருந்து நிதிகளைக் கடனாகப் பெறுதல் அல்லது திரட்டுதல் மற்றும் காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகளையும், கொடைகளையும் அல்லது நன்கொடைகளையும் பெற்றுக் கொள்ளுவதற்கும்:

ஆயின், பேரவையானது, கூட்டிணைக்கப்பட்ட குழுவிற்கு செய்யப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக் கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும், வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்;

(ஈ) மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் மற்றும் வேறு கைமாற்றத்தகு சாதனங்கள் என்பவற்றை ஆக்குதல், வரைதல், ஏற்றுக் கொள்ளுதல், கழிப்பனவு செய்தல், புறக்குறிப்பிடுதல், கைமாற்றுதல், வாங்குதல், விற்றல் மற்றும் வழங்குதல் அத்துடன் ஏதேனும் வங்கியில் கணக்குகளைத் திறத்தல், தொழிற்படுத்துதல், பேணுதல் மற்றும் மூடிவிடுவதற்கும்;

(உ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை பேரவை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்வதற்கும்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஏதேனும் சட்டமுறையான நம்பிக்கைப் பொறுப்பு அல்லது ஏதேனும் நிலையான அல்லது தனிப்பட்ட ஆதனம் என்பவற்றை பொறுப்பேற்றலும், ஏற்றுக் கொள்ளுதலும், நிறைவேற்றுதலும், புரிதலும் மற்றும் நிர்வகித்தலும்;

(எ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவலர்களையும் ஏனைய ஊழியர்களையும் நியமித்தலும், தொழிலுக் கமர்த்துதலும், பதவிநீக்குதலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்தலும் அத்துடன் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய சம்பளங்கள், படிகள் மற்றும் பணிக்கொடைகளை அவர்களுக்குச் செலுத்துதலும் ;

(ஏ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைதலும் ஒருங்கிணைதலும்;

(ஐ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளை ஒழுங்கு செய்தலும்;

(ஒ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காக இலங்கையில் அல்லது வெளிநாட்டில் ஆளணியினருக்கு பயிற்சியளித்தல்; அத்துடன்

(ஓ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குளிக்கோள்களை எய்துவ தற்கு இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டதான எல்லா காரியங்களையும் செய்தல்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் விதிகள்

**7.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஏதேனும் பொதுக்கூட்ட மொன்றில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத பெரும்பான்மையொன்றினால் பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றுள் எதற்காகவும் இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினது ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை, காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தலும், உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதலும், உறுப்பினர்கள் விலகுதலும், அவர்களை விலக்குதலும் அல்லது அவர்கள் பதவியிலிருந்து நீங்குதலும் மற்றும் உறுப்பினர்களினால் செலுத்தப்படற்பாலதான கட்டணங்களும்;

(ஆ) பேரவையின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது பதவிதாங்குநர்கள் பதவியை வறிதாக்கல் அல்லது அவர்களைப் பதவியிலிருந்து அகற்றுதல் மற்றும் அவர்களின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்;

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் மற்றும் சேவையாளர்களின் நியமனத்திற்கான நியதிகளும் நிபந்தனைகளும், அவர்களின் தத்துவங்களும், பணிகளும் மற்றும் கடமைகளும்;

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும், பேரவையினதும் கூட்டங்களைக் கூட்டுவதற்காகவும் அதனை நடாத்துவதற்காகவும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள், அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களும் நிகழ்ச்சிநிரலும், அதற்கான கூட்ட நடப்பெண்ணும் மற்றும் அவற்றில் அலுவல்களை நடாத்துதலும்;

(உ) பேரவையினதும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும் உறுப்பினராகவிருப்பதற்கான தகைமைகளும் தகைமையீனங்களும்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஆதனங்களின் நிர்வாகமும் முகாமையும்; அத்துடன்

(எ) பொதுவாகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தலும் கூட்டிணைக்கப்பட்ட குழுவைக் கலைத்தலும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்பட்டதைப் போன்று அதேபோன்ற கூட்டமொன்றிலும் மற்றும் அதே போன்ற முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது இல்லாதொழிக்கப் படலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள், அத்தகைய விதிகளை ஆக்குவதன் மேல் மூன்று மாதங்களினுள் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(4) கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் ஆக்கப்பட்ட விதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் அதன் வெளியிட்டின் பின்னர் மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்திற்காக பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப் படாத ஏதேனும் விதி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் ஆக்கப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) எந்தத் தேதியன்று ஏதேனும் விதி அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்பட்டதோ அந்தத் தேதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(6) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கு அமைந் தோராதல் வேண்டும்.

உறுப்பினர்கள் பற்றிய இடாப்பு

8. பேரவையானது உறுப்பினர்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்; இதில், உறுப்பினர்களின் பெயர், முகவரி மற்றும் வேறு அத்தியாவசியமான விபரங்கள் என்பன உள்ளடக்கப் படுதல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் நிதியம்

9. (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பிரிவு 6 (இ) இன் ஏற்பாடுகளுக்கு அமைய கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்காகவும் அது தொடர்பாகவும் கொடை, இறுதிவிருப்பாவணக்

கொடை, நன்கொடை, ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள், கட்டணங்கள் அல்லது மானியக் கொடை என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வரவிற்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்:

ஆயின், இப்பிரிவின் நோக்கங்களுக்காக "வங்கி" என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க. வங்கித்தொழில் சட்டத்தின் பாகம் I இன் கீழ் "உரிமம் அளிக்கப்பட்ட வர்த்தக வங்கி" என்றாக உரிமமளிக்கப்பட்ட வங்கியொன்று என்று பொருள்படும்.

(3) சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்

10. (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழு, அதன் வருமானமும் செலவினமும், சொத்துக்களும், பொறுப்புக்களும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வேறெல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணக்குகள், தகைமைபெற்றவொரு கணக்காய்வாளரொருவரினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது–

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக உள்ளவரும், அத்தகைய நிறுவகத்தின்

பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராக உள்ளவருமான தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) எக்கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர்கள் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் உள்ளாரோ அக்கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

வருடாந்த அறிக்கை

11. (1) பேரவையானது ஒவ்வொரு நிதியாண்டுக்குமான கூட்டிணைக்கப்பட்ட குழுவின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிக்கையை, கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது தகைமைபெற்ற கணக்காய்வாளரொருவரினால் உறுதிப்படுத்தப்பட்டு கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றுடன் சேர்த்து கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கும், 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புகள் பதிவாளருக்கும், அத்தகைய அறிக்கை எந்த ஆண்டு தொடர்பானதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆண்டின் ஆறு மாதங்கள் முடிவுறுவதற்கு முன்னர் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) நிதியாண்டின்போது கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் பெறப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பணங்கள் தொடர்பாகத் தனிவேறான கணக்கொன்று (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

மன்றத்துக்கு வருமதியானவையும் மன்றத்துக்கு செலுத்தப்படற்பாலவையுமான தனிசுகள்

**12.** இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உளதாயிருக்கும் மன்றத்தின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக் களும், இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப் படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழு அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்

**13.** இச்சட்டத்தினதும் வேறு ஏதேனும் எழுதிலான சட்டத்தின தும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழு, ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறு வகையில் அதற்கு உரிதாகவரக்கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எடுப்பதற்கும் வைத்திருப்பதற் கும் சட்டப்படி இயன்றதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டு மென்பதுடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் இச்சட்டத்தின் நோக்கத்துக்காகவும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டிணைக் கப்பட்ட குழுவின் விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடு வைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்ப்பதற்கான தத்துவத்துடனும் கூட்டிணைக்கப் பட்ட குழுவினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

பணங்களையும் ஆதனத்தையும் பயன்படுத்தல்

**14.** இச்சட்டத்தினதும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, எவ்வாறாயினும் பெறப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணங்களும் ஆதனமும் அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக மாத்திரம் பயன்படுத்தப் படுதல் வேண்டுமென்பதுடன், அதன் பாகம் எதுவும், பங்கிலாம், மிகையூதியம் அல்லது இலாபம் அல்லது வேறுவகையில் எவ்வாறிருப்பினும் நேரடியாகவோ அல்லது நேரடியாக வல்லாமலோ கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை

**15.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை, பேரவை யின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான ஏதேனும் சாசனத்தில் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை, பேரவையினால் முடிபு செய்யப்படக்கூடியவாறான, பேரவையின் பதவிதாங்குநரொருவரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

16. (1) கூட்டிணைக்கப்பட்ட குழு கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாத் தனிசுகளையும், பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது. ஆனால் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களையுடையதும், அதன் விதிகளின்படி அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடை செய்யப்பட்டுள்ளதுமான வேறு ஏதேனும் நிறுவனத்திற்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

கலைக்கப்பட்டதன் மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, கொடுக்கப்பட வேண்டிய அல்லது கைமாற்றப்பட வேண்டிய எல்லா தனிசுகளும் பொறுப்புகளும் கொடுத்துத் தீர்த்தபின்னர் எந்ததோதான நிறுவனத்திற்கு ஆதனம் எஞ்சியிருக்கின்றதோ பொதுக் கூட்டமொன்றில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்களின் வாக்குப் பெரும்பான்மை கொண்டு கலைப்புக்கு நேர்முன்னர், தோதான நிறுவனமானது 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமுகசேவைகள் ஒழுங்கமைப்புகள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் அங்கீகாரத்துடன், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

17. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளை அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளை பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

குடியரசின் உரிமைகளைப் பேணல்

18. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.